**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 9/2025**
**வழக்கு சாட்சி PW-1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செல்வக்குமார் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | திருமலை | தொழில் | : | சிற்ப வேலை |
| கிராமம் | : | பனையூர் | வயது | : | 35 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Monday of 23.02.2026.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**முதல் விசாரணை :**

நான் பனையூரில் குடியிருந்து வருகிறேன். நான் சிற்ப வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். நான் பனையூரில் சிற்ப வேலை செய்து வந்தேன். நான் சிற்ப வேலை செய்யக்கூடாது என எதிரிகள் சொன்னார்கள். 2022ம் வருடம் ஒரு நாள் தேதி, மாதம் ஞாபகமில்லை, இரவு 08.30 மணியளவில் எதிரிகள் என்னுடைய வீட்டிற்கு வந்து என்னுடைய இருசக்கரவாகனத்தை இரும்புக்கம்பி மற்றும் விறகுகட்டையால் அடித்து நொறுக்கினார்கள். அப்போது நான் வீட்டில் இல்லை. வீட்டில் என்னுடைய அப்பா இருந்தார்.

எதிரிகள் என்னுடைய அப்பாவை தகாத வார்த்தைகளினால் பேசி, "இனிமேல் மறுபடியும் சிற்ப வேலை செய்தாலோ, ஊருக்குள் வந்து பேசினாலோ வெட்டி பரண் மேல போட்டுருவேன்" என்று மிரட்டியுள்ளார்கள். என்னுடைய அப்பா தற்போது உயிருடன் இல்லை. என்னுடைய வாகனத்திற்கு ரூ.27,000/-ற்கு சேதம் ஏற்பட்டது. பின்னர்

இது சம்பந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.23 17:38:10 +0530

**<u>வாக்குமூலம்</u>**

**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**

**<u>வழக்கு எண் : SC.No. 9/2025</u>**

**<u>வழக்கு சாட்சி PW-2</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கார்த்திகா | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | முருகன் | தொழில் | : | குடும்ப பொறுப்பு |
| கிராமம் | : | பனையூர் | வயது | : | 29 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Monday of 23.02.2026.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் பனையூரில் குடியிருந்து வருகிறேன். நான் குடும்ப பொறுப்பு வகித்து வருகிறேன். அ.சா.1 செல்வகுமார் என்னுடைய கணவர். எதிரிகளை எனக்கு தெரியும். என்னுடைய கணவர் சிலை வேலை செய்யக்கூடாது என்று எதிரிகள் பிரச்சனை செய்து வந்தார்கள். 08.07.2022 அன்று இரவு 08.00 மணியளவில் நானும், என் மாமனார் திருமலையும் வீட்டில் இருந்தோம். எதிரிகள் எங்களுடைய வீட்டிற்கு வந்து பிரச்சனை செய்தார்கள். தேவடியா என்று கெட்ட வார்த்தை பேசினார்கள். "நீங்கள் இந்த வீட்டில் இருக்கக்கூடாது, இரவோடு இரவாக வெட்டி, பெட்ரோல் ஊற்றி கொழுத்தி விடுவோம்" என மிரட்டினார்கள். பின்னர், என்னுடைய கணவர் வீட்டிற்கு வந்து இருசக்கரவாகனமான யமாகா ஸ்கூட்டியை வீட்டிற்கு வெளியே நிறுத்தி விட்டு ஆற்று பக்கம் சென்றார். பின்னர் மீண்டும் எதிரிகள் வந்து இருசக்கரவாகனத்தை கம்பு வைத்து அடித்து நொறுக்கினார்கள். ரூ.6000/-ற்கு

இருசக்கரவாகனத்திற்கு சேதம் ஏற்பட்டது. பின்னர் என்னுடைய கணவர் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.23 17:38:16 +0530